# பாகம் — அ

# சொத்துரிமை மாற்றுச் சட்டம், 1882 (2002ல் திருத்தப்பட்டச் சட்டம்— 2003ம் வருடத்திய 3வது சட்டம்)

**[THE TRANSFER OF PROPERTY ACT, 1882] AS AMENDED BY THE TRANSFER OF PROPERTY (AMENDMENT) ACT, 2002 ] (ACT NO.3 OF 2003)]**

## பகுதி – I [ PART I ]

## (முதல்நிலை பாடங்கள்)(பிரிவு 1 - 4)

**[PRELIMINARY (Sec. 1 - 4) ]**

### 1. சொத்துரிமை மாற்றுசட்டத்தின் தோற்றம், நோக்கம் மற்றும் குறியெல்லை [EVOLUTION, OBJECT AND SCOPE OF THE TRANSFER OF PROPERTY ACT]

**[முக்கியம்]**

**பாடச்சுருக்கம்: [SYNOPSIS]**

அ. முன்னுரை

ஆ. சட்டத்தின் முகப்புரை

இ. சட்டத்தின் நோக்கம்

ஈ. சட்டத்தின் குறியெல்லை மற்றும் செயல்பாடு

**அ. முன்னுரை: [INTRODUCTION]**

சொத்துரிமை மாற்றுச் சட்டம் 1882 இயற்றப்படுவதற்கு முன் இந்தியாவில் அசையாச் சொத்துக்களின் உரிமை மாற்றங்கள் ஆங்கிலேய சட்டம் மற்றும் தகைமை முறையின் கொள்கைகள், இந்தியாவில் மன்ற ஆளுநர் முறையின் கொள்கைகள், இந்தியாவில் மன்ற ஆளுநர் ஜெனரலால் பிறப்பிக்கப்பட்ட விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் சட்டங்களால் ஆளுமை செய்யப்பட்டு வந்தது.



பிரபு சார்லஸ் டர்னர், பிரபு ரேமாண்ட் வெஸ்ட், பிரபு வொய்ட்லி ஸ்டோக்ஸ் ஆகியோர் அடங்கிய மூன்றாவது சட்டக்குழுவானது சொத்துரிமை மாற்றம் மீதான இறுதிவரைவு மசோதாவை தயாரித்தது. இது 1882 ம் வருடம் பிப்ரவரி 17ம் தேதி சொத்துரிமை மாற்றுச் சட்டம் 1882 ஆக பிறப்பிக்கப்பட்டது.

**ஆ. சட்டத்தின் முகப்புரை: [PREAMBLE OF THE ACT]**

தரப்பினர்களின் செயலால் சொத்துரிமை மாற்றம் தொடர்பான சட்டத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளை வரையறுப்பதற்கு மற்றும் திருத்துவதற்கு என்று முகப்புரை கூறுகிறது.

இவ்வாறு சொத்துரிமை மாற்றுச் சட்டமானது தரப்பினர்களின் செயலால் ஆன சொத்துரிமை மாற்றத்திற்கு மட்டுமே ஆனது. சட்டத்தின் செயல் மற்றும் செயல்பாட்டிற்கு அல்ல. தரப்பினர்களின் செயல் ஆன சொத்துரிமை மாற்றத்தை கூட அச்சட்டம் விரிவாகவும் முழுமையாகவும் கூறவில்லை. உதாரணமாக அசையும் சொத்தின் அடகுப்பொருட்கள், அரசாங்க கடனுறுதிப் பத்திரங்கள், காப்பீட்டு பாலிசிகள் போன்றவற்றுடன் இது செயலாற்றுவதில்லை.

**இ. சட்டத்தின் நோக்கம்: [OBJECT OF THE ACT]**

வாழும் நபர்களுக்கிடையே சொத்து மாற்றத்தை முறைப்படுத்துவதற்கு விதிகளை ஏற்படுத்துவதே சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இது உயில்வழிச் சட்டம் மற்றும் விருப்புரிமையில்லா வாரிசுரிமைக்கு கூடுதலான சட்டமாகும். அசையாச் சொத்துக்களில் அது தொடர்புடைய அளவிற்கு இந்திய ஒப்பந்த சட்டத்தை செயல்படுத்துவது இச்சட்டத்தின் இதர நோக்கமாகும்.

**ஈ. சட்டத்தின் குறியெல்லை மற்றும் செயல்பாடு: [SCOPE AND APPLICATION OF THE ACT]**

ஆரம்பத்திலிருந்தே பின்வரும் காரணங்களுக்காக சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் குறியெல்லை வரம்புடையதாக உள்ளது.

1. இந்த சட்டம் இந்தியாவிற்குள் நடைபெறும் சொத்துரிமை மாற்றத்திற்கு மட்டுமே செயல்படும். இந்தியாவிற்கு வெளியில் உள்ளவைகளுக்கல்ல. மேலும், இந்தியாவில் நடைபெறும் அனைத்து சொத்துரிமை மாற்றங்களுக்கும் இது செயல்படாது.

2. தரப்பினர்களின் செயலால் ஏற்படும் சொத்துரிமை மாற்றங்களுக்கு மட்டுமே சொத்துரிமை மாற்றுச் சட்டம் செயல்படுகிறது. சட்ட செயல்பாட்டின் மூலம் ஏற்படும் மாற்றத்தை அதாவது சட்ட நீதிமன்றத்தின் ஆணையினால் ஏற்படும் மாற்றத்தை இது முறைப்படுத்துவதில்லை. உதாரணம், நொடிப்புநிலை நடவடிக்கைகளின் மூலம் சொத்துக்கள் விற்பனை, இதர நீதிமன்ற விற்பனைகள் அல்லது ஏல விற்பனைகள் போன்றவை சொத்து மாற்றுச் சட்டத்தின் வரம்பிற்குள் வருவதில்லை.

3. உயிருடன் இருக்கும் நபர்களுக்கிடையிலான சொத்துரிமை மாற்றம் பற்றி மட்டுமே இச்சட்டம் செயலாற்றுகிறது.

4. அசையும் சொத்துகளின் உரிமை மாற்றத்திற்கு இச்சட்டம் வகையங்களைக் கொண்டிருந்தாலும் (உ.ம் பிரிவு 5லிருந்து 37வரை) இயற்றப்பட்ட சட்டத்தின் பெரும்பாலான வகையங்கள் அசையாச் சொத்துகள் உரிமை மாற்றத்திற்கு மட்டுமே பொருந்தத்தக்கதாகும்.

5. சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் இயல் **II** அதாவது பிரிவுகள் 5 — 53—**A** முகம்மதியர்கள் செய்யும் சொத்துரிமை மாற்றத்தில் செயல்படாது. அதுபோல கொடைகள் தொடர்பான சட்டம், இச்சட்டத்தின் பிரிவு 129 ல் குறிப்பிட்டுள்ளபடி முகம்மதியர் கொடைகளுக்கு செயல்படாது.

6. நிலவரை செயல்பாட்டில் இச்சட்டத்திற்கு வரம்புகளுண்டு. 1882ல் இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபோது, பகுதி ஆ வை சேர்ந்த நிலவரைகள், பம்பாய், பஞ்சாப் மற்றும் டில்லி உள்ளிட்ட மாநிலங்கள் தவிர ஒட்டு மொத்த இந்தியாவிலும் இது செயல்படும். சட்டத்திற்கு நிலவரை செய்பாடு அதிகாரம் வழங்குவதென்பது சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்தைச் சார்ந்தது.



அதுபோல அரசிதழிலில் வெளியிடுவதன் மூலம், மாநில அரசாங்கம் முன்மேவும் வகையில் அல்லது உடன்மேவும் வகையில், அத்தகைய மாநில அரசாங்கத்தால் ஆளுமை செய்யப்பட்ட நிலவரைகளில் எந்தப் பகுதிக்கும் விலக்களிக்கலாம். இந்தச் சட்டத்தின் சட்டப் பிரிவுகள் 54—பாரா—2 மற்றும் 3, 39, 107 மற்றும் 123க்கு மொத்தமாகவோ, தனித்தனியாகவோ விலக்களிக்கலாம்.

முடிவாக சொத்துரிமை மாற்றுச் சட்டம் அதன் செயல்பாட்டில் விரிவான சட்டமல்ல. எனவே, அசையாச் சொத்துக்களின் மாற்றத்தில் பரந்தளவு இடவரைக்கு சட்டம் விதிகள் வழங்கினாலும், இதை ஒரு முழுமையான சட்டமாகக் கருதமுடியாது.

**பல்கலைக்கழக மாதிரி வினாக்கள்:**

1. ‘சொத்துரிமை மாற்றுச் சட்டம்’ தரப்பினர்களின் செயலால் ஆன மாற்றங்களை மட்டுமே கையாற்றுகிறது. சட்ட செயல்பாட்டின் மூலம் ஏற்படும் மாற்றங்களுக்கு இதில் செயல்பாடு இல்லை. சட்டசெயல்பாட்டின் மூலமான மாற்றவழக்குகளை கூறி ஆராய்க.
2. சொத்துரிமை மாற்றுரிமைச் சட்டம் 1882 ன் நோக்கம், குறிக்கோள்இ குறியெல்லை மற்றும் செயல்பாட்டை விளக்குக.
3. சிறு குறிப்புவரைக:

   அ. சொத்துரிமை மாற்றுச் சட்டம் 1882 ன் குறிக்கோள்.

   ஆ. சொத்துரிமை மாற்றுச்சட்டம் 1882ன் குறியெல்லை மற்றும் செயல்பாடு.

❀❀❀